தமிழ் வளர்ச்சித் துறை போட்டிகள்

மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள்

சென்னையில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கிய தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந.அருள்.

சென்னை, ஜன. 28: தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாநில அளவில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு துறையின் இயக்குநர் ஔவை ந.அருள் ரொக்கப் பரிசு, சான்றிதழ்களை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாநில அளவிலான கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இதில், மொத்தம் 217 பேர் பங்கேற்றனர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விவரம் (கல்லூரி மாணவர்கள் பிரிவு):

கவிதைப் போட்டி: முதல் பரிசு- திருவாரூர் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழக மாணவர் ச.வே.மருது பகவதி, 2-ஆம் பரிசு- திண்டுக்கல் கொசவப்பட்டி புனித வளனார் கல்வியியல் கல்லூரி மாணவி வெ. மோகனப்பிரியா, 3-ஆம் பரிசு- திருப்பூர் உடுமலைப்பேட்டை அரசு கலைக் கல்லூரி மாணவர் மு. மாரிமுத்து.

கட்டுரைப் போட்டி: முதல் பரிசு - பாளையங்கோட்டை தூய இஞ்ஞாசியார் கல்வியியல் கல்லூரி மாணவி ஆ.பயோனா ஜோஷி, 2-ஆம் பரிசு - வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மாணவி ச.பிரவீனா, 3-ஆம் பரிசு - சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவி வே.பவித்ரா.

பேச்சுப் போட்டி: முதல் பரிசு - எம்.வி. முத்தையா அரசு மகளிர் கல்லூரி மாணவி வீ.பவித்ரா, 2-ஆம் பரிசு - கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணா கல்வியியல் கல்லூரி மாணவர் மு.சந்தோஷ்குமார், 3-ஆம் பரிசு - திருநெல்வேலி சதக்கத்துல்லா அப்பா கல்லூரி மாணவர் மா.கா. ராஜவேல்.

(பள்ளி மாணவர்கள் பிரிவு):

கவிதைப் போட்டி: முதல் பரிசு - தூத்துக்குடி புனித பிரான்சிஸ் சவேரியார் மேல்நிலைப் பள்ளிமாணவர் வெ. விஷ்ணு, 2-ஆம் பரிசு - விருதுநகர் மாவட்டம் சத்ரிய மகளிர் மேல்நிலைப் பள்ளி

மாணவி ச.மகாதேவி, 3-ஆம் பரிசு - அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூரைச் சேர்ந்த அரியலூர் மாவட்ட அரசு மாதிரி பள்ளி மாணவி சு. ஜெயஸ்ரீ.

கட்டுரைப் போட்டி: முதல் பரிசு - தென்காசி மாவட்டம் திருமதி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி மு.யோகஸ்ரீ, 2-ஆம் பரிசு - விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி பா. குணஸ்ரீ, 3-ஆம் பரிசு - பாளையங்கோட்டை புனித இஞ்ஞாசியார் மேல்நிலைப் பள்ளி மாணவி வீ. சுபி.

பேச்சுப் போட்டி: முதல் பரிசு - கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் புனித ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப் பள்ளிமாணவி ரா.ரஷ்மி, 2-ஆம் பரிசு - திருச்சி மண்ணச்சநல்லூர் சா. அய்யம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி த.கௌசிகா, 3-ஆம் பரிசு - திருவண்ணாமலை மாவட்டம் நகராட்சி பெண்கள் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மாணவி இர. ஹேமலதா.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் பிரிவுகளில் முதல் 3 இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கு முறையே ரூ. 15,000, ரூ. 12,000, ரூ. 10,000 பரிசுத் தொகை என மொத்தம் ரூ. 2 லட்சத்து 20 ஆயிரம் பரிசுத் தொகையை தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை ந.அருள் செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

மாணவிகள் தற்காப்பு கலை: கின்னஸ் சாதனைக்கு திட்டம்

மேயர் பிரியா தகவல்

சென்னை, ஜன. 28: பள்ளி மாணவிகளுக்கு இடையேயான தற்காப்பு கலையில் கின்னஸ் சாதனைநிகழ்த்தவுள்ளதாகமேயர் ஆர்.பிரியா தெரிவித்தார்.

சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள சர்மாநகர் சென்னை உயர்நிலைப் பள்ளியில் நடப்பு கல்வியாண்டுக்கான பள்ளி ஆண்டு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மேயர் ஆர்.பிரியா பேசியது:

நடப்பு கல்வியாண்டுக்கான பள்ளி ஆண்டு விழா தற்போது தொடங்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிகள் குறித்து பெற்றோர் அறிந்து கொள்ளும் வகையில் ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. தொடர்ந்து, சென்னையில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் கொண்டாடப்படும். தனியார் பள்ளிகளுக்கு நிகராக சென்னை பள்ளிகள் திகழ வேண்டும் என்பதற்காக மாணவர்களுக்கு அடையாள அட்டை, காலணி, சீருடை உள்ளிட்டவை வழங்கப்பட்டு வருகின்றன.



சென்னை தண்டையார்பேட்டை மண்டலம் சர்மா நகர் சென்னை உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழாவில், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிய மேயர் ஆர்.பிரியா. உடன் பெரம்பூர் சட்டப்பேரவை உறுப்பினர் ஆர்.டி.சேகர், துணை மேயர் மு.மகேஷ்குமார், இணை ஆணையர் (கல்வி) ஜெ.விஜயா ராணி, நிலைக்குழுத் தலைவர் பாலவாக்கம் த.விஸ்வநாதன் (கல்வி) உள்ளிட்டோர்.

மேலும், சிட்டீஸ் திட்டம் மூலமாக பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் இசையில் சிறந்து விளங்கும் வகையில் சென்னை பள்ளிகளுக்கு வயலின், கிட்டார், கீபோர்டு உள்ளிட்ட இசைக் கருவிகள் வழங்கப்பட்டு, அதற்கான ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் விளையாட்டு, தற்காப்பு கலைகள் மாணவர்களிடையே ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, பெண் குழந்தைகளுக்கு கராத்தே போன்ற தற்காப்பு கலைகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தற்காப்புக் கலையில் அடுத்த மாதம் கின்னஸ் சாதனை நிகழ்த்தப்படவுள்ளது என்றார் அவர்.

அர்ஜுனா விருது பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பாராட்டு விழா

சென்னை, ஜன. 28: அர்ஜுனா விருது பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு வேலம்மாள் கல்வி குழுமம் சார்பில் பாராட்டு விழா சென்னையில் நடைபெற்றது.

நாட்டுக்கும், தமிழகத்துக்கும் பெருமை சேர்த்த 416 விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டு விழா சென்னை வேலம்மாள் நெக்ஸஸ் சார்பில் முகப்பேரில் உள்ள வேலம்மாள் அரங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்கு வேலம்மாள் நெக்ஸஸ் குழும தாளாளர் எம்.வி.எம்.வேல்மோகன் தலைமை வகித்து, அர்ஜுனா விருது பெற்ற பாரா பேட்மின்டன் வீராங்கனைகள் துளசிமதி, மணிஷா ராமதாஸ், நித்யா ஸ்ரீ சிவன், இந்தியன் ஸ்குவாஷ் வீரர் அபய் சிங், தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கச் செயலர் கிருபாகரராஜா ஆகியோரைப் பாராட்டி கௌரவித்தார். தொடர்ந்து சிறந்த 5 உடற்தகுதி ஆசிரியர்களைப் பாராட்டி புதிய கார்களையும் வழங்கினார்.

விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகைக்கான காசோலையை வழங்கிய வேலம்மாள் நெக்சஸ் குழுமத் தாளாளர் எம்.வி.எம்.வேல்மோகன். உடன், அர்ஜுனா விருது பெற்ற பாரா பேட்மின்டன் வீராங்கனைகள் துளசிமதி, மணிஷா ராமதாஸ், நித்யா ஸ்ரீ சிவன், இந்திய ஸ்குவாஷ் வீரர் அபய் சிங், தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கச் செயலாளர் கிருபாகர ராஜா உள்ளிட்டோர்.

ரூ. 2.55 கோடி நிதி: நிகழ்ச்சியில் எம்.வி.எம்.வேல்மோகன் பேசியது:

விளையாட்டுத் துறையில் மாணவர்களின் பங்களிப்பைக் கொண்டாடும் விதமாகவும், வேலம்மாளின் விளையாட்டு முன்னேற்றக் கொள்கைகளை வலியுறுத்தும் விதமாகவும் இந்த விழா உள்ளது. 2025-26 கல்வியாண்டுக்கு ரூ. 2.55 கோடி விளையாட்டு உதவித் தொகையும், தமிழ்நாட்டை தேசிய விளையாட்டுகளில் பிரதிநிதித்துவம் செய்வதற்காக மாணவர்களின் விமான பயண செலவுகளுக்காக ரூ. 30 லட்சம் நிதியுதவியும் வழங்கப்படும் என்றார் அவர்.

இதில் விளையாட்டு வீரர்கள், குடும்பத்தினர், பள்ளி குழும ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வனத் துறை ஆராய்ச்சி பணியிடங்களுக்கு ஜன.31-இல் நேர்காணல்

சென்னை, ஜன. 28: தமிழ்நாடு வனத் துறையின் தற்காலிக ஆராய்ச்சி பணியிடங்களுக்கு ஜன.31-ஆம் தேதி நேர்காணல் நடைபெறவுள்ளது.

இது குறித்து வனத்துறை வெளியிட்ட அறிவிப்பு:

தமிழ்நாடு வனத் துறையின் கீழ் செயல்படும் வனவிலங்கு மேலாண்மைத் திட்ட மேம்பாட்டுப் பிரிவில் தற்காலிக இளநிலை ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். இதில், உயிரியலாளர் பதவிக்கு வனவிலங்கு அறிவியல், வனவிங்கு உயிரியல், உயிரியல், வனத்துறை, தாவரவியல், சூழலியல் அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல், சூழலியல், தாவர அறிவியல் பிரிவில் முதுநிலை பட்டப்படிப்பு படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். சமூவியலாளர் பதவிக்கு சமூகவியல், மானுடவியல், சமூக அறிவியல் பிரிவில் முதுநிலை பட்டப்படிப்பு படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேலும், தமிழ் மொழியில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். ஆராய்ச்சித் துறையில் இரு ஆண்டு முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். 28 வயதுக்குள் இருக்க வேண்டும். மாதம் ரூ.31,100 தொகுப்பூதியம் வழங்கப்படும்.

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் 'முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம், வேளச்சேரி சாலை, கிண்டி, சென்னை - 32' எனும் முகவரியில் ஜன.31-ஆம் தேதி காலை 11 முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் நேர்காணலில் பங்கேற்கலாம்.

நேர்காணலுக்கு வருபவர்கள் சுயவிவரகுறிப்பு, கல்விச் சான்றிதழ், முன் அனுபவச் சான்றிதழ், அடையாள அட்டையுடன் வர வேண்டும். இதுகுறித்த கூடுதல் தகவல்களுக்கு 95668 14268 என்ற கைப்பேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

பத்மபூஷண்: அஜித்துக்கு ரஜினி வாழ்த்து

சென்னை, ஜன. 28: நடிகர் அஜித்துக்கு பத்மபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளதற்கு, ரஜினிகாந்த் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

'கூலி' படப்பிடிப்பை முடித்துக் கொண்டு சென்னை விமான நிலையம் வந்த நடிகர் ரஜினிகாந்திடம், அஜித்துக்கு பத்மபூஷண் விருது அறிவிக்கப்பட்டது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த ரஜினிகாந்த், 'வாழ்த்துகள்' என ஒற்றை வார்த்தையில் பதில் தெரிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

கூடங்குளம் ISTS டிரான்ஸ்மிஷன் லிமிடெட்
(பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்டின் 100% முழு உரிமையுள்ள துணை நிறுவனம்)
B-9, குதாப் நிறுவனப் பகுதி, கத்வாரியா சராய், புது தில்லி -110 016

அறிவிப்பு
(மின்சாரச் சட்டம், 2003 இன் பிரிவு 15 இன் துணைப் பிரிவு (2) இன் கீழ்)

1. கூடங்குளம் ISTS டிரான்ஸ்மிஷன் லிமிடெட், B-9, குதாப் இன்ஸ்டியூஷனல் ஏரியா, கத்வாரியா சாராய், புது தில்லி 110016 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், இது 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம், 2013 இன் கீழ் இணைக்கப்பட்டது, இது மத்திய மின் வாரியத்தின் கீழ் ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளது. துணைப் பிரிவு (1) மின்சாரச் சட்டம், 2003 இன் பிரிவு 15 இன், டிரான்ஸ்மிஷன் லைன்கள், துணை மின்நிலையங்கள் மற்றும் பிற சொத்துகள் தொடர்பாக, டிரான்ஸ்மிஷன் லைசென்ஸ் வழங்குவதற்காக, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள்:-

வ. எண்	லைன் / துணை மின்நிலையத்தின் பெயர் (குறிப்பிடப்பட்டுள்ள அமைவிடம்)	BPC/திறன் கணக்கெடுப்பு அறிக்கையின்படி லைன் நீளம்	பரிமாற்றக் கட்டணங்கள் (INR) ஆண்டுக்கு மில்லியன்	அட்டவணை COD	கருத்துகள்
1.	KNPP 3&4 - தூத்துக்குடி-II GIS PS 400 kV (குவாட்) D/C லைன்	120 கி.மீ	690.03	31.12.2026	-
2	தூத்துக்குடி-II GIS PS 400 kV GIS லைன் டெர்மினல் உப கரணங்கள் - 2 எண்கள்.	-			

குறிப்பு: (i) வ. எண் 1 & 2- க்கான அமைவிடங்கள் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ளன
(ii) முழுமையான விவரத்திற்கு தயவுசெய்து பார்வையிடவும் https://www.powergrid.in/subsidiaries

2. முழுமையான விண்ணப்பம் மற்றும் ஆணையத்தின் முன் தாக்கல் செய்யப்பட்ட பிற ஆவணங்கள் பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்டின் வலைத்தளமான https://www.powergrid.in/subsidiaries-இல் எந்த நபரும் அணுகலாம். விண்ணப்பத்தை C/o ED (TBCB), பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட், சவுதாமினி, பிளாட் எண் : 2, செக்டார் - 29, குர்கான் 122001 என்ற முகவரியில் உள்ள நிறுவனத்தின் அலுவலகத்திலும், கூடங்குளம் ISTS டிரான்ஸ்மிஷன் லிமிடெட் திட்டப் பொறுப்பாளர் திரு. V. முருகன் அல்லது ஆணையத்தின் அலுவலகத்தில் ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட நடைமுறையின்படி ஆய்வு செய்யலாம்.

3. ஆட்சேபனைகள் அல்லது பரிந்துரைகள் ஏதேனும் இருந்தால், செய்தித்தாளில் அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள், விண்ணப்பதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட முகவருக்கு ஆட்சேபனைகள் / பரிந்துரைகளின் நகலுடன், செயலாளர், மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 7வது மாடி, டவர் B, உலக வர்த்தக மையம், நௌரோஜி நகர், புது தில்லி - 110029 என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

இடம்: புது டெல்லி
தேதி: 29.01.2025

V. முருகன்,
திட்டப் பொறுப்பாளர்,
கூடங்குளம் ISTS டிரான்ஸ்மிஷன் லிமிடெட்

PG/CC/Notice-195(TBCB)/Advt-246/24-25/Sreshta

வேலை வாய்ப்புகள்

General

SBI
பாரத ஸ்டேட் வங்கி
மத்திய பணியமர்த்தம் மற்றும் பதவி உயர்வுத் துறை
கார்போரேட் மையம், மும்பை
தொலைபேசி: 022-22820427

கியூ ஆர்-ஐ ஸ்கேன் செய்து விண்ணப்பிக்கவும்.

ஒப்பந்த அடிப்படையில் துறை வல்லுநர் பணிநிலைப் பிரிவு அதிகாரிகளின் பணியமர்த்தம்

ஒப்பந்த அடிப்படையில், கீழ்க்கண்ட பதவிக்காக இந்திய குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

விளம்பர எண் : CRPD/SCO/2024-25/28

பதவியின் பெயர்	காலியிடம்	சமமான நிலை
துணைத் தலைவர் (முதலீட்டாளர் தொடர்பு)	01	எஸ்எம்ஜிஎஸ்-V

ஆன்லைனில் விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான மற்றும் ஆன்லைனில் விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதற்கான இணைப்புடன் தகுதி வரம்பு (வயது, அனுபவம், முந்தைய பணி விவரங்கள் ஆகியவை), காலியிடங்களின் விவரங்கள், தேவையான கட்டணம் மற்றும் பிற விவரங்கள் அறிய, வங்கியின் https://bank.sbi/web/careers வலைதளத்தைப் பார்க்கவும். விண்ணப்பிக்கும் முன்னரும், கட்டணம் செலுத்தும் முன்னரும் தங்கள் தகுதி மற்றும் பிற விவரங்களை உறுதி செய்து கொள்ள விரிவான விளம்பரத்தை பார்க்கவும். ஏதேனும் சந்தேகங்களுக்கு, (https://bank.sbi/web/careers/post-your-query) வங்கியின் வலைதளத்திலுள்ள "CONTACT US" —> "Post Your Query" என்ற இணைப்பின் மூலம் எங்களுக்கு எழுதவும்.

- **ஆன்லைனில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க மற்றும் கட்டணம் செலுத்தவேண்டிய தேதி: 22.01.2025-லிருந்து 13.02.2025 வரை.**

இடம்: மும்பை
தேதி : 22.01.2025
பொது மேலாளர் (ஆர்பி & பிஎம்)

Great Place To Work. Certified APR 2024 – APR 2025 INDIA

refex

ரீஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 2வது தளம், எண்.313, ரீஃபெக்ஸ் டவர்ஸ், ஸ்டெர்லிங் ரோடு, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600034, தமிழ்நாடு | தொலைபேசி: 044-4340 5950 | இணையதளம்: www.refex.co.in | CIN எண்: L45200TN2002PLC049601

ASH & COAL HANDLING | REFRIGERANT GASES | POWER TRADING

2024 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகளின் சாரம் (₹ இலட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	தனித்து நிற்கும்						தொகுக்கப்பட்ட					
		முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஒன்பது மாதங்கள்		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஒன்பது மாதங்கள்		முடிவடைந்த ஆண்டு
		டிசம் 31, 2024	செப் 30, 2024	டிசம் 31, 2023	டிசம் 31, 2024	டிசம் 31, 2023	மார்ச் 31, 2024	டிசம் 31, 2024	செப் 30, 2024	டிசம் 31, 2023	டிசம் 31, 2024	டிசம் 31, 2023	மார்ச் 31, 2024
		(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்பட்டது)
1	இயக்க செயல்பாடுகளிலிருந்து மொத்த வருவாய்	70,824.98	51,980.01	30,150.59	1,81,770.24	1,03,318.02	1,37,055.78	71,712.65	52,765.32	30,598.65	1,83,990.38	1,04,052.05	1,38,287.03
2	விதிவிலக்கான, அசாதாரண உருப்படிகள் மற்றும் வரிகளுக்கு முந்தைய இலாபம் / (இழப்பு)	7,097.17	4,991.86	2,734.43	16,894.84	8,918.11	13,170.46	5,931.41	4,201.81	2,519.08	14,039.62	8,475.24	12,133.19
3	வரிகளுக்கு முந்தைய இலாபம் / (இழப்பு) (விதிவிலக்கான, அசாதாரண உருப்படிகளுக்குப் பிறகு)	7,097.17	4,991.86	2,734.43	16,894.84	8,918.11	13,170.46	5,931.41	4,201.81	2,519.08	14,039.62	8,475.24	12,133.19
4	வரிகளுக்கு பிந்தைய லாபம் / (இழப்பு) (விதிவிலக்கான, அசாதாரண உருப்படிகள் மற்றும் அசோஸியேட்ஸ்களின் பங்கிற்குப் பிறகு)	5,903.61	3,731.60	1,977.68	13,232.01	6,519.30	10,094.72	5,005.33	3,106.15	1,689.52	11,046.17	5,960.50	9,297.87
5	இக்காலாண்டுக்கான மொத்த விரிவான இலாபம் / (இழப்பு)	5,904.17	3,730.49	1,967.30	13,231.45	6,498.54	10,076.63	5,004.77	3,106.52	1,678.88	11,045.98	5,939.48	9,280.08
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் ஒவ்வொன்றும் ரூ.2/- என்ற முகமதிப்பை கொண்டது	2,577.75	2,414.21	2,213.35	2,577.75	2,213.35	2,313.63	2,577.75	2,414.21	2,213.35	2,577.75	2,213.35	2,313.63
7	கையிருப்புத் தொகை (மறுமதிப்பீடு கையிருப்புத் தொகையைத் தவிர்த்து)	NA	NA	NA	NA	NA	44,951.92	NA	NA	NA	NA	NA	44,244.19
8	ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் (ரூபாயில்)	4.70	3.12	1.79	11.00	5.90	9.12	3.99	2.60	1.53	9.18	5.39	8.40
9	ஒரு பங்கிற்கு நீர்த்த வருவாய் (ரூபாயில்)	4.55	3.10	1.78	10.47	5.88	9.08	3.86	2.58	1.52	8.74	5.37	8.36

குறிப்புகள்:
1. 2015, செபி [LODR] விதிமுறைகளின் விதி 33-ன் கீழ் பங்குச்சந்தையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும், 31 டிசம்பர் 2024-ஆம் தேதியன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமே மேலே தரப்பட்டுள்ளது. நிதிசார் முடிவுகளின் முழு வடிவமும் பங்குச்சந்தை வலைதளங்கள் [www.bseindia.com & www.nseindia.com] மற்றும் நிறுவனத்தின் வலைதளத்திலும் [www.refex.co.in] கிடைக்கப்பெறுகின்றன.
2. நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 133-ன் கீழ், அறிவிக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகளின்படி [IND-AS] நிறுவனத்தின் நிதிசார் முடிவுகள் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3. தேவைப்படும் இடங்களிலெல்லாம் ஒப்பீடு நோக்கிற்காக எண்கள் மறுகுழுவாக்கம்/மறுவகையாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.
4. மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகள் தணிக்கை குழுவால் மீளாய்வு செய்யப்பட்டு, 27 ஜனவரி, 2025 அன்று நடைபெற்ற கூட்டங்களில் இயக்குனர்கள் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

↑ 200.12% Q3 FY25-ல் தனித்து நிற்கும் நிகர இலாபம்

2,997 இ-கார்கள் ரீஃபெக்ஸ் கிரீன் மொபிலிட்டி லிமிடெட்-ன் உத்திவாய்ந்த முன்னெடுப்பு நடவடிக்கையாக ஒரு முன்னணி நிறுவனத்திடமிருந்து வாங்கப்படவுள்ளன

இடம்: சென்னை
தேதி: ஜனவரி 27, 2025

இயக்குநர்கள் குழுவின் ஆணையின்படி
ரீஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்-க்காக
T. அனில் ஜெயின்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
DIN: 00181960

www.refex.co.in | Refex Group | Refex Group | @GroupRefex | refexgroup